தினமணி

# அமெரிக்காவின் சிறந்த வளரும் நிறுவனமாக சோனா குழுமத்தின் வீ டெக்னாலஜி நிறுவனம் தேர்வு

Author: சேலம்

- First Published: Sep 2, 2015 3:59 AM
- Last Updated: Sep 2, 2015 3:59 AM

**சோனா குழுமத்தின் வீ டெக்னாலஜி நிறுவனம் அமெரிக்காவின் சிறந்த வளரும் நிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.**

சோனா குழுமத்தின் வீ டெக்னாலஜி நிறுவனம் அமெரிக்காவின் சிறந்த வளரும் நிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

சோனா தொழில்நுட்பக் கல்லூரியின், நிர்வாக நிறுவனம் வீடெக்னாலஜி (மென்பொருள்).

பார்சூன் 500 என்று பார்சூன் இதழ் வெளியிடும் தரவரிசை போன்று, ஐ.என்.சி. 500 பட்டியலில் வீ டெக்னாலஜி நிறுவனம் இந்த ஆண்டு இடம் பிடித்துள்ளது. தமிழகம், கர்நாடக மாநிலங்களில் கிளைகளை உடைய வீ டெக்னாலஜி, அமெரிக்காவிலும் தனது செயல்பாடுகளை வெற்றிகரமாக நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக, வீ டெக்னாலஜி நிறுவனர் மற்றும் முதன்மை செயல் அதிகாரி சொக்கு வள்ளியப்பா, அமெரிக்காவில் மருத்துவம் மற்றும் பொறியியல் துறையில் மிகுந்த வாய்ப்புகள் உள்ளன. இந்த வாய்ப்புகளை நோக்கி முதன்மையான இடத்தை அடைய செயல்பட்டு வருகிறது. ஐ.என்.சி 500-இல் வீ டெக்னாலஜி பெற்ற இடம், அமெரிக்காவில் எங்கள் நிறுவனத்தின் அங்கீகாரத்தைத் தெளிவுபடுத்துகின்றது என்றார்.

Copyright © 2012, The Dinamani.com. All rights reserved.